Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.738/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.தங்கமாரிமுத்து | Occupation | விவசாயம் |
| Father's name | கருப்பசாமி | Calling | |
| Village | முள்ளிக்குளம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2026.

15.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முள்ளிக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான மகேஷ்வரி என்பவரையும் எனக்கு தெரியும். அசா.1 ஐ எனக்கு தெரியும், அவர் எனது ஊரை சேர்ந்தவர் தான், அவர் இறந்துவிட்டார். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 17.04.2021 அன்று காலை 07.30 மணியளவில் நானும் சமுத்திரம் என்பவரும் மல்லி மெயின்ரோட்டில் இவ்வழக்கின் எதிரிகள் குடியிருக்கும் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது முனியாண்டி இறந்துபோன நாய் ஒன்றினை எதிரிகள் வீட்டின் முன்பு போட்டுவிட்டு எதிரிகளை பார்த்து ஏன் என்னுடைய நாய்கள் மற்றும் மாடுகளை கொலை செய்ய சொன்னாய் என்று கேட்டதற்கு இவ்வழக்கின்

எதிரிகள் முனியாண்டியை தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் நானும் சமுத்திரமும் சத்தம்போட்டு முனியாண்டியை காவல்துறையில் சொல்லி தீர்வு கண்டுகொள்ளுமாறு சொன்னதாகவும் மேற்படி சம்பவம் சம்மந்தமாக மல்லி காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தது பற்றி தெரிந்துகொண்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.738/2025

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சமுத்திரம் | Occupation | கூலி வேலை |
| Father's name | வேல் | Calling | |
| Village | முத்துலிங்காபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2026.

15.07.2026

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது முத்துலிங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான மகேஷ்வரி என்பவரையும் எனக்கு தெரியும். அசா.1 ஐ எனக்கு தெரியும், அவரிடம் தான் நான் வேலை பார்த்தேன். அவர் இறந்துவிட்டார். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–

கடந்த 17.04.2021 அன்று காலை 07.30 மணியளவில் நானும் தங்கமாரி என்ற தங்கமாரிமுத்து என்பவரும் மல்லி மெயின்ரோட்டில் இவ்வழக்கின் எதிரிகள் குடியிருக்கும் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது முனியாண்டி இறந்துபோன நாய் ஒன்றினை எதிரிகள் வீட்டின் முன்பு போட்டுவிட்டு எதிரிகளை பார்த்து ஏன் என்னுடைய நாய்கள் மற்றும் மாடுகளை கொலை செய்ய சொன்னாய் என்று

கேட்டதற்கு இவ்வழக்கின் எதிரிகள் முனியாண்டியை தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் நானும் தங்கமாரி என்ற தங்கமாரிமுத்துவும் சத்தம்போட்டு முனியாண்டியை காவல்துறையில் சொல்லி தீர்வு கண்டுகொள்ளுமாறு சொன்னதாகவும் மேற்படி சம்பவம் சம்மந்தமாக மல்லி காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தது பற்றி தெரிந்துகொண்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.